# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

## Sessions Case No.157/2023

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW-9 |
| Name | : | மகேஸ்குமார் |
| Father's / Husband Name | : | கந்தசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.R.Ashok Raj Nirmal Reddy, Superintendent of this court on the day of 25.03.2026 Evidence Recorded from 12.43 p.m. to 1.15 p.m.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் போதகராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 14.06.2022 அன்று அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் போதகராக இருந்தபோது 45 வயது குட்டியப்பன் (எ) மாரியப்பன் த.பெ.சின்னபிள்ளை என்ற ஆண் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை

செய்ய வேண்டி ஓமலூர் காவல்நிலைய குற்ற எண்.338/2022 தொடர்பாக 14.06.2022 அன்று பிற்பகல் 01.50 மணியளவில் ஓமலூர் காவல்நிலைய காவல் ஆய்வாளர் வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டது. பிரேதத்தை சிறப்பு உதவி ஆய்வாளர் 533 கந்தசாமி அடையாளம் காட்டினார்.

பிரேதம் முதலில் அன்று பிற்பகல் 02.00 மணியளவில் என்னால் பார்க்கப்பட்டது. பிரேதத்தில் விரைப்புத்தன்மை உடல் முழுவதும் காணப்பட்டது. பிரேத பரிசோதனை அன்று பிற்பகல் 02.00 மணியளவில் தொடங்கப்பட்டது. பிரேதமானது ஒரு ஆண் நபரின் மிதமான ஊட்டமுடையதாக இருந்தது.

**வெளிப்புற பரிசோதனைகள்.** இறப்பிற்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு.

**1) சிவந்த சிராய்ப்பு காயம் அளவில்**

a)5x3 செமீ வலது கண்ணின் வெளிபகுதியில் இருந்து வலது புற கன்னப்பகுதி வரை காணப்பட்டது.

b) 3x1 செமீ வலது தோள்பட்டையின் உச்சியில் காணப்பட்டது.

c) 2x1 செமீ, 1x1 செமீ வலது முழங்கையின் பின்புறம் காணப்பட்டது.

d) 0.5x0.5 செமீ வலது முட்டியின் வெளிப்புற பகுதியில் காணப்பட்டது.

e) 2x1 செமீ இடது பக்கவாட்டு மண்டையில் காணப்பட்டது.

f) 1x0.5 செமீ இடது பக்கத்து கன்னத்தின் கீழ் பகுதியில் காணப்பட்டது.

**2) கிழிந்த காயங்கள் அளவில்.**

a) 2x0.5x0.5 செமீ வலது பக்க நெற்றியில், வலது கண் புருவத்திற்கு 1 செமீ மேல் காணப்பட்டது.

b) 1.5x0.5x குருத்து எலும்பு ஆளம் இடது காது மடலில் காணப்பட்டது.

3) வலது பக்க முகம் வடிவிழந்து காணப்பட்டது. கூராய்வு செய்து பார்த்ததில் வலது பக்க முக எலும்புகள் எலும்பு முறிவுடன் அதனை சுற்றியுள்ள மென் திசுகள் கன்றியவாறு காணப்பட்டது.

<u>**உள்புற பரிசோதனை.**</u>

**தலையை** கூராய்வு செய்து பார்த்தபோது தலை தோல் கன்றிய காயம் 17x10x0.5 செமீ வலது முன் பக்கவாடு மற்றும் மேல் மண்டை வலது பக்க பக்கவாட்டு தசை கன்றியவாறு காணப்பட்டது. கன்றிய காயம் அளவில் 10x8x0.5 செமீ இடது முன் பக்கவாடு மேல் மண்டை இடது பக்கவாட்டு தசை கன்றியவாறு காணப்பட்டது, 12X9x0.5 செமீ பின்மன்டையில் காணப்பட்டது.

**கபாலம்** எலும்பு முறிவு 8 செமீ நீளம் வலது பக்க மேல் மண்டையில் காணப்பட்டது. எலும்பு முறிவு 10 செமீ நீளம் வலது பக்க மேல் மண்டை முதல் நடு மண்டை வரை காணப்பட்டது. நொறுங்கிய எலும்பு முறிவு 16x12 செமீ அளவில் இடது பக்க முன் பக்கவாடு மேல்மண்டை மற்றும் பின்மண்டையில் காணப்பட்டது.

**மூளை.** பரவலான இரத்தக்கசிவு மூளை ஜவ்வில் மேல்பகுதி மற்றும் அடிப்பகுதியில் மூளை முழுவதும் காணப்பட்டது. மண்டையின் அடிப்பகுதி நொறுங்கிய எலும்பு முறிவு அடிப்பகுதி முழுவதும் காணப்பட்டது. **கழுத்தை** கூராய்வு செய்து பார்த்தபோது நாவடி எலும்பு (hyoid bone) இயல்பாக இருந்தது மற்ற கழுத்து கட்டமைப்புகள் இயல்பாக இருந்தது. **நெஞ்சு பகுதி**யை கூராய்பு செய்து பார்த்தபோது விலா எலும்புகள் இயல்பாக இருந்தது. **நுரையீரல்கள்** இரண்டும் இயல்பான அளவிலும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் இரத்தசெறிவுடன்

காணப்பட்டது. **இருதயம்** இயல்பான அளவிலும் குறுக்கு வெட்டு தோற்றத்தில் அதன் அறைகளில் சிறிதளவு இரத்தம் இரத்தக்கட்டியுடன் காணப்பட்டது. பெரிய தமனிகள், வால்வுகள் மற்றும் இருதய தசைகள் இயல்பாக காணப்பட்டது.

**வயிற்று பகுதி**யை கூராய்வு செய்துபார்த்தபோது இரைப்பையில் 75 மிலி அடர்ந்த சிவந்த நிறம் திரவம் பழச்சாறு வாடையுடன் காணப்பட்டது. அதன் உட்பகுதி இரத்தசெறிவுடன் காணப்பட்டது.

கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் இயல்பான அளவிலும் குறுக்கு வெட்டுத் தோற்றத்தில் இரத்தசெறிவுடன் காணப்பட்டது. சிறுநீர் பை காலியாக இருந்தது. ஆண் உறுப்பு இயல்பாக இருந்தது. தண்டுவடம் மற்றும் இடுப்பு எலும்பு இயல்பான நிலையில் இருந்தது. உடல் உள்ளுருப்புகள் சேகரம் செய்து இரசாயன பகுப்பாய்விற்காக அனுப்பிவைக்கப்பட்டது. மரணித்திருந்த நேரம் பிரேத பரிசோதனைக்கு முன் 12 முதல் 24 மணி நேரம் இருக்ககூடும். இரசாயன பரிசோதனை அறிக்கைக்காக நிலுவையில் வைக்கப்பட்டது. நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை இதுதான், அ **அதசாஆ.6** ஆகும். இரசாயன பரிசோதனை அறிக்கையில் இறந்து போன நபரின் உடலில் எத்தில் ஆல்கஹால் இருந்தது கண்டறியப்பட்டது. அந்த இரசாயன பரிசோதனை அறிக்கை இதுதான், அது **அதசாஆ.7** ஆகும். எனது இருதி கருத்தாக மேறசொன்ன இறந்த நபர் அவருக்கு தலையில் ஏற்பட்ட காயங்களினால் இறப்பு ஏற்பட்டிருக்க கூடும் என்று கருத்து கூறி சான்று வழங்கினேன். எனது இருதி கருத்துரை இதுதான், அது **அதசாஆ.8** ஆகும்.

மேற்கண்ட காயங்கள் சாபொ.1 கல்லால் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டா என்றால் – வாய்ப்புகள் உண்டு. அதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)**

இறந்தவரின் தலையில் ஏற்பட்ட காயங்களைத் தவிர உடலில் ஏற்பட்ட அனைத்து காயங்களும் சாதாரண சிராய்ப்பு காயங்கள் என்று சொன்னால் – சரியல்ல. பொதுவாக ஒரு நபர் குடிபோதையில் மேலிருந்து கீழே தடுமாறி கல்லின் மீது விழும்போது இறந்த நபருக்கு ஏற்பட்ட காயங்கள் போல ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் – ஒரு நபர் தலை குப்புற அவ்வாறான பகுதியில் விழும்போது ஏற்பட வாய்ப்புள்ளது.

**மறுவிசாரணை. இல்லை**

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

## II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**Sessions Case No.157/2023**

| | |
|---|---|
| Deposition of witness for | : PW-10 |
| Name | : சுரேஷ்குமார் |
| Father's / Husband Name | : சின்னதம்பி |
| Village | : |
| Taluk | : |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர் |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Law by Thiru.R.Ashok Raj Nirmal Reddy, Superintendent of this court on the day of 25.03.2026 Evidence Recorded from 1.16 p.m. to 01.30 p.m.

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:–**

நான் தற்போது சேலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் முதுநிலை வருவாய் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ம் வருடம் ஓமலூர் வட்டம் செல்லபிள்ளை குட்டை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது 14.06.2022 ம் தேதி நான் பணியிலிருந்தபோது பகல் 12.00 மணியளவில் ஓமலூர் காவல்நிலைய

ஆய்வாளர் அவர்கள் எனக்கு தொலைபேசியின் மூலமாக தொடர்பு கொண்டு ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக கோட்டகவுண்டம்பட்டியில் உள்ள ஐடெக் கம்பெனி அருகில் இருப்பதாகவும் அங்கு வருமாறு என்னையும் எனது கிராம உதவியாளர் பெருமாள் என்பவரையும் அழைத்தார். அதன்படி நானும் எனது உதவியாளர் பெருமாள் என்பவரும் அங்கு சென்றோம்.

அங்கு போலிசார் விஷ்ணுகுமார் என்பவரை பிடித்து வைத்திருந்தார்கள், அவர் ஆஜர் எதிரிதான். பிறகு காவல் ஆய்வாளர் அவர்கள் எதிரி விஷ்ணுகுமாரை விசாரிக்க அவர் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் எனது கிராம உதவியாளர் பெருமாள் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். பிறகு எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தின்படி அன்றைய தினமே 01.30 மணியளவில் ஐடெக் (hi-tech) கம்பெனி அருகில் உள்ள முட்புதரில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த லுங்கி ஒன்றையும் சட்டை ஒன்றையும் ஆய்வாளர் மகஜரில் எங்கள் முன்னிலையில் கைப்பற்றினார். என்னிடம் காட்டப்படும் பச்சை கலர் முழுக்கை சட்டை நீதிமன்றத்தில் உள்ளதுதான். அது **சாபொ.2** ஆகும். வெள்ளை கலர் கோடு போட்ட லுங்கி நீதிமன்றத்தில் உள்ளதுதான். அது **சாபொ.3** ஆகும்.

என்னிடம் காட்டப்படும கைப்பற்றுதல் மகஜரில் நானும் எனது கிராம உதவியாளர் பெருமாள் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்தோம். அந்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான், அது **அதசாஆ.9** ஆகும். எதிரியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அதசாஆ.10** ஆகும். அதுசம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>

என் அலுவலகத்திலிருந்து ஓமலூர் காவல்நிலையம் சுமார் 6 கி.மீ. தொலைவில் உள்ளது. சம்பவ இடத்திலிருந்து என் அலுவலகம் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. ஐடெக் (hi–tech) கம்பெனிக்கு விசாரணைக்கு சென்றபோது அங்கு 4 காவலர்கள் இருந்தார்கள். அதசாஆ 10 கையால் எழுதப்பட்டிருந்ததா என்றால் கையால் எழுதப்பட்டிருந்தது, பிறகு சாட்சி ஆவணத்தை பார்த்து டைப் அடித்திருந்ததாக கூறுகிறார். வாக்குமூலம் அரை மணி நேரத்தில் பதிவு செய்யப்பட்டது. அவ்வாறு டைப் செய்யப்பட்ட வாக்குமூலத்தில் தான் நான் சாட்சி கையொப்பம் இட்டேன். போலிசார் என்னை விசாரித்தபோது கைப்பற்றப்பட்ட லுங்கி மற்றும் சட்டையின் நிறத்தை நான் குறிப்பிட்டிருக்கவில்லை.

சொன்ன நேரத்தில். சொன்ன இடத்தில் வைத்து. சொன்ன எதிரி சொன்ன ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுத்திருக்கவில்லை என்றாலும் சொன்னவாறு சொத்துக்கள் எதுவும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கைப்பற்றியிருக்கவில்லை என்றாலும் போலிசார் காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணத்தில் நான் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றாலும் அரசு ஊழியர் என்பதால் அரசுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் – சரியல்ல.

**மறுவிசாரணை.** இல்லை

ஒம்/– S. எழில் வேலவன்
இரண்டாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.